மாலை முரசு
பக்கங்கள் 13+3
முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 03 வெள்ளிக்கிழமை 19.09.2025 | அதிர்வு 50

## மனைவியைக் கொடூரமாக கொலை செய்த கணவன்!



கணவன் தனது மனைவியைக் கூரிய ஆயுதத்தால் கொடூரமாகத் தாக்கிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் கம்பஹா, மீரிகம பொலிஸ் 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்

# ஊழல்வாதிகளுக்கு ஒருபோதும் மன்னிப்பு கிடையாது!



## அமைச்சர் சந்திரசேகர் திட்டவட்டம்

"ஊழல், மோசடிகளில் ஈடுபட்டு இந்த நாட்டு மக்களின் சொத்துகளைச் சூறையாடிய அரசியல்வாதிகளுக்கு மன்னிப்பு என்பதே கிடையாது. சட்டத்தின் பிடிக்குள் இருந்து அவர்கள் தப்பவே முடியாது."

– இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கொழும்புத்துறை இறங்குதுறையில் கடற்றொழில்,நீரியல்மற்றும்கடல்வளங்கள்அமைச்சின் 140 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்பு ஆரம்பமாகவுள்ளது. 03

# திலீபனின் திருவுருவப் படத்தை அகற்றி திருமலையில் பொலிஸார் வெறியாட்டம்

## தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள் கடும் கண்டனம்

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் கடந்த 4 நாள்களாகத் திருகோணமலையில் இடம்பெற்று வந்த நிலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை பொலிஸாரால் தியாக தீபத்தின் திருவுருவப் படம் அகற்றப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களால் திலீபனின் திருவுருவப் படம் சிவன் கோயிலடியில் நிறுவப்பட்டுத் தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் மாலை 5.15 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்று வந்தது. 03



# கனகராயன்குளத்தில் கோர விபத்து! ஜேர்மன் பிரஜை ஒருவர் உயிரிழப்பு!!







(கி.வசந்தன்)

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் சைக்கிளுடன் கனரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் ஜேர்மன் பிரஜை ஒருவர் மரணமடைந்துள்ளார்.

கனகராயன்குளம் ஏ – 9 வீதியில் இன்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த கனரக வாகனம் வவுனியா – கனகராயன்குளம் பகுதியில் அதே திசையில் பயணித்த சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். 03



# தியாக தீபம் திலீபனின் 5ஆம் நாள் நினைவேந்தல்







தியாக தீபம் திலீபனின் 5ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில், சுடரேற்றி, திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.



# பிரதேச ஊடகவியலாளர் மீது தாக்குதல்: சுதந்திர ஊடக இயக்கம் கடும் கண்டனம்

'லங்காதீப' ஊடகத்தின் மொர கொல்லாகம பிரதேச ஊடகவியலா ளர் சிசில நந்தன கெலேகம மீது நடத் தப்பட்ட தாக்குதல் சம்பவத்துக்குச் சுதந் திர ஊடக இயக்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்குள்ளான மொரகொல்லா கம பிரதேச ஊடகவியலாளர் சிசில நந் தன கெலேகம, அநுராதபுரம் – பொல் பிதிகம பிரதேசத்தில் குழந்தை ஒன்று பாதுகாப்பற்ற விவசாயக் கிணற்றில் விழுந்து உயிரிழந்த சம்பவம் தொடர்பில் செய்தி சேகரித்து ஊடகத்தில் வெளி யிட்டுள்ளார். இதனால் அவர் மீது தாக்கு தல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான ஊடகவிய லாளர், குருநாகல் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின் றார்.

ஊடகவியலாளர் சிசில நந்தன கெலேகம உடல்நலக் குறைவு காரண மாக ஏற்கனவே சத்திர சிகிச்சை பெற்ற வர் எனவும், ஆனாலும் தொடர்ந்து ஊடகக் கடமைகளில் ஈடுபட்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் காரணமாக மொர கொல்லாகம பிரதேச ஊடகவிய லாளர் சிசில நந்தன கெலேகமவின் உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது எனவும் கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதலின்போது ஊடக வியலாளரைக் காப்பாற்றச் சென்ற அவரது மனைவியும் காயமடைந் துள்ளார்.

இது தொடர்பில் சந்தேகநபர் ஒரு வர் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

ஆனால், ஊடகவியலாளர் சிசில நந்தன கெலேகம தொடர்பில் கண் காணித்து சந்தேகநபருக்குத் தகவல் வழங்கி குற்றத்துக்கு உடந்தையாக இருந்தவர்களையும் கைது செய்து அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சுதந்திர ஊடக இயக்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கனகராயன்குளத்தில்...

விபத்தில் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தார்.

அவர் ஜேர்மன் நாட்டில் இருந்து வருகை தந்து கனகராயன்குளம் பகுதி யில் தங்கியிருந்த நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய கனரக வாகனத்தின் சாரதி கனகராயன் குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

விபத்து தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### ஊழல்வாதிகளுக்கு...

இதன் ஆரம்ப நிகழ்வு கொழும்புத் துறை இறங்குதுறையில் நேற்று வியா ழக்கிழமை மாலை நடைபெற்றது. இதில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் பங்கேற்றி ருந்தனர்.

இந்த நிகழ்வில் அமைச்சர் இராம லிங்கம் சந்திரசேகர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகை யில்,

"நாட்டை அபிவிருத்தி செய்யும் அதேவேளை யாழ். மாவட்டத்தையும் கட்டியெழுப்புவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இங்கு வாழும் மக்களுக்கு வருமானம் கிடைக்கக் கூடிய வழிமுறைகள் உருவாக்கப்படும். குறிப்பாக யாழ். மாவட்டத்தில் ஒதுக் கப்பட்டிருந்த பகுதிகளும் கட்டியெழுப் பப்பட்டு வருகின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலின் போது தமிழ் மக்கள் எமக்குப் பேராதரவை வழங்கினர். உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போதும் உரிய அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது என்றே சொல்ல வேண்டும். இந்தப் பிரதேசம் எமக்கு முக்கியம். அதனை மேம்படுத்த நடவடிக்கை எடுப்போம்.

நாம் இவ்வாறு அபிவிருத்தி நோக் கிப் பயணித்துக்கொண்டிருக்கையில் ஒரு சில அரசியல் பூச்சாண்டிகள், விசர் பிடித்து, விசமத்தனமான கருத்துகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்த நாட்டில் இலஞ்ச, ஊழல், மோசடிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்ப தில் உறுதியாக இருக்கின்றோம். இதில் இருந்து பின்வாங்கப்போவதில்லை. இதனால் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட நபர்களுக்கு நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நாட்டு மக்களின் சொத்துகளைச் சூறையாடிய, வளங்களை கொள்ளை யடித்த நபர்களுக்கு மன்னிப்பு கிடையாது. சட்டம் தனக்குரிய கடமையைச் சரிசர நிறை வேற்றும். அதற்குரிய முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. எவ்வித அரசியல் தலையீடுகளும் நீதித்துறையில் மேற் கொள்ளப்படுவதில்லை.

யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலு வலகம் அமைந்துவிட்டது. சர்வதேச விமான நிலையம் உள்ளது. சர்வ தேச விளையாட்டு மைதானமும் வரப் போகின்றது. இறங்குதுறைகள் அபி விருத்தி செய்யப்படுகின்றன. மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னு ரிமை வழங்கப்படும்." – என்றார்.

### திலீபனின்...

இந்நிலையில் இன்று திருகோண மலை பிரதான பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் அதிகாரிகளால் திலீபனின் திருவுருவப் படம் முறையற்ற விதத்தில் அகற்றப்பட்டுள்ளது.

பொலிஸாரின் இந்த அராஜக நட வடிக்கைக்குத் தமிழ்த் தேசியச் செயற் பாட்டாளர்கள் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

### மனைவியை...

பிரிவுக்குட்பட்ட ரேந்தபொல பிரதேசத் தில் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மீரிகம, ரேந்தபொல பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கணவன் மற்றும் மனைவிக்கு இடை யில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரண மாக இந்தக் கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று பொலிஸ் விசார ணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேகநபரான கணவன் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை மீரி கம பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

# அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து! மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மரணம்!!

அதிவேக நெடுஞ்சாலையில் இடம் பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹோமாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அதிவேக நெடுஞ்சாலையில் கெண்டலந்த பகுதியில், கொழும்பில் இருந்து அவிசாவளை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த பஸ்ஸுடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். ஹோமாகம பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய நபரே உயிரிழந்தவர் ஆவார். சடலம் பலப்பிட்டிய வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்கொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# தொடரும் பேரிழுக்கு

நமது சமூகத்தில் நலிவுற்ற தரப்பினர் என்று பார்த்தால் அது, பெண்களும் குழந்தைகளும்தான். இந்த இருதரப்பினரும்தான் அதிக அளவில் முறையற்ற விதத்தில் அடக்குமுறைக்கும், பாலின பாகுபாடு மற்றும் சமுதாய நெருக்கடிகளுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாகின்றனர். ஆனால் சமூகத்தில் மெலியரான இந்தத் தரப்பினருக்கு - பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் - நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் நமது நாடும், நமது நீதி முறைமையும், நடவடிக்கைப் பாணிகளும் நெறிமுறையாக இல்லை என்பதுதான் மனதை நெருடும் விடயங்களாகும்.

ஒரு நாடும் சமூகமும் முன்னேற வேண்டுமானால் - மனிதத்துவ மாண்புகளில் மேன்மை அடைய வேண்டுமானால் - அங்கு பெண்களும் குழந்தைகளும் மதிக்கப்பட்டு, உரிய அந்தஸ்து அளிக்கப்படுகின்ற நிலைமை பேணப்பட வேண்டும்.

சமுதாயத்தில் நலிவுற்றவர்களான பெண்களையும் குழந்தைகளையும் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், சமூக அந்தஸ்து நிலை ரீதியாகவும் மேம்படுத்துவதும் பேணிப் பாதுகாப்பதும் உரிய மதிப்பும், மரியாதையும் அளிப்பதும் சமூகத்தின் தவிர்க்க முடியாத கட்டாயக் கடப்பாடாகும்.

இலங்கையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான விடயத்தில் நீண்ட காலமாகவே உரிய நடவடிக்கைகள் மிகக் குறைவாகவே எடுக்கப்படுகின்றன என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களில் பல நூற்றுக்கணக்கில் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. அத்தகைய வழக்குகளில் சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் காலம் இழுத்தடிக்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டின் புள்ளி விவரங்களின்படி நீதிமன்றங்களில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் துஷ்பிரயோக வழக்குகள் நிலுவையில் இருந்தன. மேல் நீதிமன்றங்களில் உள்ள பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளில் தோராயமாக மூன்றில் ஒரு பங்கு குழந்தைகள் தொடர்பானவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமல்ல, 2023 ஆம் ஆண்டில் மட்டும் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைகள் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டவை பதிவாகியுள்ளன.

2019 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இலங்கை இல்லங்களில் ஒவ்வொரு ஐந்து பெண்களில் இரண்டு பேர் தங்கள் துணைவர்களால் ஏதேனும் ஒரு வகையான வன்முறையை அனுபவிக்கின்றனர்.

அது மாத்திரமல்ல, பெண் இறப்புக்களில் மூன்றில் ஒரு பங்குக்கு மேலானவற்றுக்கு நெருங்கிய துணைவரின் வன்முறை காரணமாகும் என்ற அதிர்ச்சித் தகவலும் வெளியாகி உள்ளது.

இலங்கையின் நீதித்துறையின் அதி மந்த வேகம் குறித்து இந்தப் பத்தியில் பல தடவைகள் குறிப்பிட்டாகிவிட்டது. பெண்கள், குழந்தைகள் விடயத்தில் அவர்களுக்கு எதிரான குற்றங்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் இலங்கை நீதிமன்றங்களின் மெத்தனப் போக்கு மனதை நெருட வைப்பதாக இருக்கின்றது.

காலனித்துவ கால கட்டமைப்பு ஒழுங்கு முறைமையைக் கொண்ட நமது நீதித்துறை, மாறிவரும் உலக சமுதாயத்தின் தேவைகளுக்கும் நியதிகளுக்கும் நியாயங்களுக்கும் ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டு, விரைந்த நீதியை உறுதிப்படுத்துவதில் சரியாகச் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டு மறுக்க முடியாத உண்மை.

இலங்கையின் வழக்கறிஞர்கள், சட்ட வல்லுநர்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் அடங்கிய குழு இலங்கையில் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளுக்கான நீதியை விரைவுப்படுத்துவதற்குரிய குறிப்பிட்ட நடவடிக்கைகளை அடையாளம் கண்டு, பரிந்துரைகளின் தொகுப்பை இலங்கை நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவிடம் இந்த ஆண்டு ஜூன் மாதம் ஒப்படைத்துள்ளது.

இலங்கையில் பல ஆண்டுகளாக நீதிப் பொறிமுறைகள், கொள்கைகள் மற்றும் சிறுவர்கள், பாதிக்கப்பட்டவர்களை கையாள்வதற்கான அணுகுமுறைகளில் உள்ள கடுமையான இடைவெளிகளை யுனிசெவ் போன்ற ஐ.நா. நிறுவனங்கள் பல அறிக்கைகள் மூலம் இலங்கைக்குத் தெளிவுபடுத்தி உள்ளன.

ஆயினும் நலிவுற்ற இத்தரப்பினரைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான சட்ட, நீதித்துறை ஏற்பாடுகள் இன்னும் முறையாகச் செய்யப்படவில்லை என்பதுதான் இந்தச் சமூகத்தின் பேரிழுக்காகத் தொடர்கின்றது.



# கொழும்புத்துறை இறங்குதுறை புனரமைப்பு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவும்

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

கொழும்புத்துறை இறங்குதுறை புனரமைக்கப்படுவதன் ஊடாக இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவது மாத்திரமல்ல இந்தப் பகுதியுமே அழகாக மாறவுள்ளது. இதற்கான நடவடிக்கை எடுத்த இந்த அரசையும் அமைச்சர் சந்திரசேகரையும் பாராட்டுகின்றேன்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கொழும்புத்துறை இறங்குதுறை கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் 140 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்பு ஆரம்பமாகவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு கொழும்புத்துறை இறங்குதுறையில் நேற்று வியாழக்கிழமை மாலை (18) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஆளுநர்,

அபிவிருத்தி என்பது தனியே பௌதீக முன்னேற்றம் மாத்திரம் அல்ல. அந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரமும் மேம்படவேண்டும். இன்றைய முயற்சியும் அவ்வாறான ஒன்றே. நான் யாழ்ப்பாண மாவட்ட செயலராக இருந்தபோது இந்த இறங்குதுறையை அபிவிருத்தி செய்வதற்கு பல முயற்சிகளை எடுத்திருந்தேன். ஆனால் அது அப்போது சாத்தியப்பட்டிருக்கவில்லை. இன்றைய அரசின் காலத்தில்அதுசாத்தியமாகியிருக்கின்றது.



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்று ஓராண்டுகாலத்தினுள்ளேயே மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதில் இந்தத் திட்டமும் ஒன்று. இதற்காக ஜனாதிபதிக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வடக்கு மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

யாழ். நகரத்தில் இருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தினுள் இந்தப் பகுதி இருந்தாலும் அழகான கிராமமாக இருக்கவில்லை. இன்று இந்த இறங்குதுறை புனரமைப்பு என்பது எதிர்காலத்தில் இந்தக் கிராமத்தையும் அழகாக மாற்றும் என்று நம்புகின்றேன்.

இந்த முயற்சிகளை முன்னெடுத்துள்ள கௌரவ அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க மற்றும் சந்திரசேகர் ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.-என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராசா, ஜெ.றஜீவன், மாநகர சபை உறுப்பினர்கள், கடற்றொழில் அமைச்சின் செயலர், யாழ்ப்பாண பிரதேச செயலாளர், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# வேலணை பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரை வழிமறித்து இன்று போராட்டம்

## உறுப்பினர்களின் கோரிக்கைக்கு இணங்கிய ரஜீவன் எம்.பி.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கு அப்பிரதேச மக்கள் பிரதிநிதிகளாகிய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களைப் புறக்கணித்து வேலணை பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்கள், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் ஜெயச்சந்திர மூர்த்தி ரஜீவனைப் பிரதேச வளாகத்துக்குள் உள் நுழைய விடாது தடுத்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இன்று (19) காலை 10 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட குறித்த எதிர்ப்புப் போராட்டத்தால் இணைத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் இடையே வாக்குவாதம் முற்றியதால் பிரதேச செயலக சூழலில் பெரும் பரபரப்பான நிலை ஏற்பட்டது.

குறித்த போராட்டத்தின் போது வேலணை பிரதேச மக்கள் பிரதிநிதிகளான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இருவரை தவிர ஏனையவர்கள் அனுமதிக்கப்படாது தடுக்கப்பட்டனர்.

இதை சுற்று நிருபத்தை காரணம் காட்டித் தப்பித்துக்கொள்ள இணைத் தலைவர் முற்பட்டவேளை ஏனைய பிரதேச சபைகள் கட்சிக்கு ஓர் உறுப்பினர் அனுமதித்திருந்த நிலையில் இங்கு அரசியல் ரீதியாக பாரபட்சம் காட்டி உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இது பிரதேச ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் ரஜீவனின் இயலாமையுடன் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு முகங்கொடுப்பதைத் தவிர்ப்பதற்காகவுமே இவ்வாரு சுற்று நிரூபம் வழி சமைக்கிறது என்று சுட்டிக்காட்டி, உறுப்பினர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் உறுப்பினர்களின் வாக்குவாதத்துக்கும் கோரிக்கைக்கும் இணக்கம் தெரிவித்த ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதேச இணைத்தலைவர், கூட்டத்துக்கு உறுப்பினர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

இந்த நிலையில் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இன்று காலை 10.15 மணிக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தலைமையில் ஆரம்பமானது.

கூட்டம் ஆரம்பமான நிலையில் கூட்டத்தில் முக்கியஸ்தர்களுக்கான ஆசன ஒழுங்குபடுத்தலில் தவிசாளருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாத நிலை இருந்ததை சுடிக்காட்டியும் அதற்கான ஒழுங்கை செய்வதற்கு பிரதேச செயலரும் இணைத் தலைவரும் தட்டிக்கழித்தை அடுத்து கூட்டத்தில் மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டது.

குறிப்பாக வேலணை பிரதேசத்தின் தவிசாளர் அசோக்குமார் தற்போதைய அரசால் பல்வேறு சந்தர்பங்களில் புறக்கணிக்கப்பட்டு வருகின்ற நிலை காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. இது அரசின் திட்டமிட்ட செயலாகவே பார்க்கப்படுகின்றது.

இது இப்பிரதேச மக்களின் எதிர்பார்ப்புக்களை தடுப்பதாகவும் இருக்கின்றது எனவும் உறுப்பினர்களுக்கன முக்கியத்துவம் மதிக்கப்பட வேண்டும் என்றும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும் சமூக மட்ட பிரதிநிதிகளை அழைத்திருக்கும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் எமது பிரதேசத்தின் மக்கள் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்காது மட்டுப்படுத்தும் செயலானது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது.



# கரைதுறைப்பற்று பிரதேசசபை அமர்வில் மறைக்கப்படும் பல்வேறு இரகசியங்கள்!

## இதனாலே ஊடகங்கள் அனுமதிக்கப்படவில்லை என்கிறார் பிரதேச சபை உறுப்பினர் தொம்மப்பிள்ளை பவுள்ராஜ்

(பா.சதீசன்)

கரைதுறைப்பற்று பிரதேசசபை அமர்வில் பல்வேறு இரகசியங்கள் மறைக்கப்படுகின்றன. இதனாலே ஊடகங்கள் அனுமதிக்கப்படவில்லை எனவும் சபை வந்ததன் பின்னர் மிகவும் மட்டமான முறையில் கரைதுறைப்பற்று பிரதேசசபை செயற்பாடுகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன என்றும் பிரதேச சபை உறுப்பினர் தொம்மப்பிள்ளை பவுள்ராஜ் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேச சபை அமர்வில் மறைக்கப்பட்ட இரகசியங்களை கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முல்லை நகர வட்டாரத்தின் பிரதேச சபை உறுப்பினர் தொம்மப்பிள்ளை பவுள்ராஜ் இன்று (19) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஜனநாயக நாட்டில் ஜனநாயக பண்பின் அடிப்படையில் நடைபெறும் சபைக் கூட்டத்தில் ஊடகங்களுக்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளன. 11.09.2025 அன்று சுற்றுச்சூழல் பணியகத்தின் ஊடாக தவிசாளர், செயலாளருக்கு உரிய கூட்டம் சிகிரியாவில் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

குறித்த கூட்டத்துக்குக் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் நிதியில் தவிசாளரான சின்னராசா லோகேஸ்வரன் பிரதேச சபை வாகனத்தை பயன்படுத்தி மாங்குளம் வரை சென்றுள்ளார். அதன் பின்னர் பணிக்கப்பட்ட இடத்துக்குச் சென்றுள்ளார். மாகாண சபையால் ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாக கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் தவிசாளர் அளவுக்குமீறிய போதையால் குறித்த கூட்டத்துக்குப் போகவில்லை. இதனால் பிரதேசசபை, மாகாணசபைக்கு உரிய நிதியானது வீணடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சம்பந்தபட்ட அதிகாரிகளிடம் முறையிட இருக்கின்றேன்.

அதனைவிட கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் கூட்டத்துக்குச் சென்று திரும்பும் போது தவிசாளருடன் பயணிக்க முடியாத நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தவிசாளரின் வாகனத்தில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலை இனி வரகூடாது என்பதற்காக நேற்று (18) இடம்பெற்ற சபை அமர்வில் 10 நிமிடம் கதைப்பதற்கு கேட்டிருந்தேன். அப்போது இவ்விடயம் தொடர்பாக சபை அமர்வில் கதைக்க முடியாது என தவிசாளர் நிராகரித்திருந்தார்.




பிரதேசசபை உறுப்பினர்கள் வேலை நிமித்தம் தவிசாளரிடம் வாகனங்கள் தேவை என கேட்டபோது ஆளும் கட்சி முடிவெடுத்துதான் தரவேண்டும் என கூறியுள்ளார்.

பிரதேசசபை வந்து மூன்று மாதங்கள் முடிவடைந்து விட்டது. வீதி விளக்குகள் சரியான முறையில்பொருத்தப்படவில்லை என மக்கள் முறையிடுகின்றார்கள். சபை வந்ததன் பின்னர் மிக கேவலமான முறையில் கரைதுறைப்பற்று பிரதேசசபை செயற்பாடுகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன.

குறித்த தவிசாளரை உருவாக்கிய தலைமைகளிடம் நான் கேட்கின்றேன். உங்கள் இடத்தில் வயது கூடிய, திறமையான, அனுபவமிக்க, படித்தவர்கள் ஏராளமானோர் இருக்கின்றனர். இவ்வாறானவர்களின் செயற்பாடுகளால் பிரதேச சபை வெட்கி தலைகுனிகின்றது.

தவிசாளருடன் சிலர் வால்பிடிக்கின்றனர். அவர்கள் குடிப்பதற்கேதான் திரிகின்றனர். அவர்களிடம் நான் கேட்கின்றேன். நேற்றையதினம் பிரதேச சபையில் உறுப்பினர்களுக்கான கூட்டம் இடம்பெற்றிருந்தது. இருபத்தொரு உறுப்பினர்களில் மக்களுக்கான தேவைகளை எம் பிரேரணையாக கொடுக்க வேண்டும். ஆனால் கொடுத்தது இரண்டு உறுப்பினர்கள் மாத்திரமே. ஒரு உறுப்பினர் ஒரு பிரேரணை கொடுத்தார். நான் மக்கள் சார்பாக 8 பிரேரணைகளை கொடுத்திருந்தேன். சில உறுப்பினர்கள் கொடுக்கும் பிரேரணைகளை தவிசாளர் ஏற்றுக் கொள்வதே இல்லை. அதனால் சில உறுப்பினர்கள் பிரேரணை கொடுப்பதில்லை.

தவிசாளர் பற்றித் தவறாக கதைக்க வேண்டும் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கம் எனக்கில்லை. அவர் தனது கடமைகளை சரியாக செய்தால் ஆதரவு கொடுப்பேன். ஆனால் மக்கள் பணம் சுரண்டப்படுமானால் அதனை அனுமதிக்கமாட்டேன். தனியாக நின்றாவது போராடுவேன்.

நான் ஒரு பிரேரணை கொடுக்கின்றேன். இனிவரும் காலங்களில் சபை அமர்வுகளுக்கு ஊடகங்கள் அனுமதிக்கப்பட வேண்டும். – என்றார்.





# தியாக தீபம் திலீபனின் ஊர்தி பவனி இன்று மன்னாரை வந்தடைந்தது

(மன்னார் நிருபர்)

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 'திலீபன் வழியில் வருகிறோம்' என்று முன்னெடுக்கப்படுகின்ற ஊர்தி பவனியானது இன்று வெள்ளிக்கிழமை (19) காலை மன்னார் நகர பகுதியை வந்தடைந்தது.

தியாக தீபம் தீலீபனிம் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி கடந்த ஒரு வாரகாலமாக தமிழர் தாயக பகுதிகளில் அஞ்சலிக்காக சென்று வருகின்ற நிலையில் மன்னார் மக்களில் அஞ்சலிக்காக இன்று வருகை தந்திருந்தது.

இதன்போது பொது மக்கள் அருட் தந்தையர்கள் இணைந்து அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

மன்னார் நகர் பிரதான சுற்றுவட்ட பகுதியில் பொது மக்களின் அஞ்சலிக்காக நிறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மன்னார் நகர பஸ் தரிப்பிடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.





# அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவக வெள்ளிவிழாவும் மதிப்பளிப்பு நிகழ்வும்

புலம்பெயர் நாடுகளில் தமிழ்க் கலைரயை வளர்த்தெடுக்கும் பணியை முன்னெடுத்து வரும் அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் வெள்ளி விழாவும் மதிப்பளிப்பு நிகழ்வும் பேர்ண் மாநகரின் புறுக்டோப் மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உயர்பட்ட படிப்புகளின் பீடாதிபதி முதுநிலைப் பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி யும் சிறப்பு விருந்தினர்களாக முதுநிலை வாழ்நாள் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாசும் ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாசும் கலந்துகொண்டனர்.

சுவிற்சர்லாந்து நாட்டில் தமிழ்க் கலையை முன்னெடுத்துவரும் தமிழ்க் கலை ஆசிரியர்கள் சேவைக்கால அடிப்படையில் மதிப்பளிக்கப்பட்டதுடன் 25 வருடங்களுக்கு மேலாக கலைப்பணி யாற்றிய 11 கலை ஆசிரியர்களுக்கு "கலைச்சுடர்" விருது வழங்கியதோடு பரதக்கலையில் முனைவர் பட்டத்தைப் பெற்ற முனைவர் மதிவதனி சுதாகரனுக்கும், முனைவர் சந்திரவதனி விஜய சுந்தரத்துக்கும் சிறப்பு மதிப்பளிப்பு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வானது அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் தேர்வு விதி முறைக்கு அமைவாக தேர்வுக்குத் தோற்றி ஆற்றுகைத்தரத்தை நிறைவுசெய்த நடனம், பரதம், இசை, வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம் ஆகிய துறைகளைச் சேர்ந்த 131 மாணவர்களுக்கும் "பரதக்கலைமணி", "இசைக் கலைமணி" ஆகிய பட்டயச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து தமிழ்க்கலையில் மூன்று பாடங்களிலும் பட்டயச் சான்றிதழ்களைப் பெற்ற மூன்று மாணவர்களுக்குச் சிறப்பு மதிப்பளிப்பு வழங்கப்பட்டதோடு துறைசார் பாடங்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் நிறுவுநர் இறைபதமடைந்த பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி ஞாபகார்த்த விருதும் வழங்கி வைக்கப்பட்டது.

சிறப்பு நிகழ்வாக நிறுவகத்தின் வெள்ளிவிழா மற்றும் மதிப்பளிப்பு நிகழ்வுகளை உள்ளடக்கிய சிறப்புமலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

புலம்பெயர் நாடுகளில் தமிழ்க் கலையையும் அதன் நெறி முறைகளையும் ஒருங்கிணைப்பதற்காக தமிழ்த் தேசியத்தின் பணிப்பில் தேசிய உணர்வோடு மறைந்த முதுநிலை தமிழ்ப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் தலைமையில் 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மாதம் 18 ஆம், 19ஆம் திகதிகளில் சுவிற்சர்லாந்து நாட்டில் தமிழ்க் கல்விச் சேவையினரால் நடத்தப்பட்ட அனைத்துலக நுண்கலைப்பாட ஆசிரியர்களுக்கான பட்டறையின் போது அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் தோற்றுவிக்கப்பட்டது.

அன்று முதல் 25 ஆண்டுகளாக தொடர்ந்தும் புலம்பெயர் நாடுகளில் தமிழ்க்கலையினை வளர்த்தெடுக்கும் அளப்பரிய பணியினை இவ் நிறுவகம் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிறுவகத்தின் வெள்ளிவிழா நிகழ்வில் பெருந்திரளானோர் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர். நிகழ்வுகளின் இடையே மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.



# விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ள விவசாயிகள்

## நிலமைகளை நேரில் சென்று ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தமது விவசாய உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதில் நீண்டகாலமாக இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அந்தப் பகுதி மக்களின் அழைப்பை ஏற்று குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்றதுடன் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்துகொண்டார்.

குறிப்பாக கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலுமுள்ள விவசாயிகள் தாம் உற்பத்தி செய்யப்படுகின்ற வத்தகை, நிலக்கடலை, சோளம் உள்ளிட்ட உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாமல் உள்ளதால் பெரும் பாதிப்புக் களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

எனவே தமது பாதிப்பு நிலை உணர்ந்து, தம்மால் உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கு உரிய வழிவகைகளை ஏற்படுத்தித் தருமாறும் விவசாயிகளால் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதேவேளை குறித்த பகுதிகளில் தற்போது இருபது விவசாயிகள் 20 ஏக்கரும் மேல் சோளப்பயிற்செய்கை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட சோளத்தையும் விவசாயிகளால் சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் சந்தைப்படுத்த முடியாத நிலையில் அறுவடை செய்யப்படாத சோளம் தோட்டங்களையும் பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், விவசாயிகளின் பாதிப்புத் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

விவசாயிகள் பெருத்த போராட்டங்களுக்கு மத்தியில் உற்பத்தி செய்த விளைபொருள்களை விற்பனை செய்யமுடியாத நிலை இங்கு காணப்படுகின்றது. எமது விவசாயிகள் எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

அந்தவகையில் விரைவில் நாட்டில் ஆயிரம் உற்பத்தி கூட்டுறவு சங்களை நிறுவுதற்குத் திட்டமிட்டுள்ளது என்று அண்மையில் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்திருக்கிறார்.

எனவே அவ்வாறு நிறுவப்படவுள்ள குறித்த ஆயிரம் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களில், மூன்று உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களைக் கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளில் நிறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதற்கான கோரிக்கையை உரிய அமைச்சருக்கு விரைவில் எழுத்து மூலமாகச் சமர்ப்பிப்பேன்.

அதற்கமைய இந்தப் பகுதிகளில் வத்தகை, சோளம் மற்றும் நிலக்கடலை என்பவற்றுக்குத் தனித்தனியே உற்பத்த கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டால், இப்பகுதி விவசாயிகள் எதிர்நோக்கும் சந்தைப்படுத்தல் இடர்பாட்டுக்குத் தீர்வு கிடைக்கும்.- என்றார்.





# முத்துநகர் விவசாயிகளது போராட்டம் மூன்றாவது நாளாகவும் தொடர்கிறது!

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை, முத்துநகர் விவசாயிகளால் திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நடத்தப்பட்டு வரும் கவனீர்ப்புப் போராட்டம் இன்று (19) மூன்றாவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது. இதேவேளை இன்று திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட செயலகத்தில் நடை பெற்றது. கடந்த மாதம் இந்த ஒருங் கிணைப்புக்குழு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது முத்துநகர் விவசாயிகள் மாவட்ட செயலக வாசலை மறித்து பெரும் வீதி மறிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# திருமலை முத்து நகர் விவசாயிகளைச் சந்தித்தார் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்

திருகோணமலை முத்து நகர் விவசாயிகளைத் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன இன்று (19)மாவட்ட செயலக உப ஒன்று கூடல் மண்டபத்தில் வைத்துச் சந்தித்தார்.

இதில் முன்னால் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் கலந்து கொண்டு முத்து நகர் விவசாய காணி தொடர்பிலான அறிக்கை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முன் வைத்தார்.

முத்து நகர் விவசாயிகள் இன்று (19)மூன்றாவது நாளாக சத்தியக் கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் தங்களது விவசாய நிலங்களை தங்களுக்கு வழங்க வேண்டும் என்று கோரினர்.

இந்த விடயம் தொடர்பில் விவசாயிகளுக்குச் சாதகமான தீர்வைப் பெற்றுத் தர முயற்சிப்பார் என்றும் இலங்கை துறைமுக அதிகார சபையினருடனும் கலந்துரையாடி விவசாயச் செய்கை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகளுக்கான பதிலை வழங்குவார் என்றும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.



# நாகப்பட்டினம், திருவாரூரில் நாளை விஜய் சுற்றுப்பயணம்



த.வெ.க. தலைவர் விஜய் தனது தமிழக சுற்றுப்பயணத்தை கடந்த சனிக்கிழமை திருச்சியில் தொடங்கினார். அந்த சுற்றுப்பயணத்தைத் தொடர்ந்து நாளை நாகப்பட்டினம் மாவட்டத்திலும், திருவாரூர் மாவட்டத்திலும் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் அவர் சுற்றுப்பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறார்.

இந்நிலையில் இது தொடர்பாக தவெக தலைமை நிலையக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“மக்கள் விரும்பும் முதல்வர் வேட்பாளர், தமிழக வெற்றிக் கழகத் தலை zவர் விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி, நாளை நாகப்பட்டினம் மாவட்டத்திலும், திருவாரூர் மாவட்டத்திலும் நடைபெற உள்ளது.

இந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளுக்காகத் தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டப் பொறுப்பாளர்களை உள்ளடக்கிய இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் குழுக்கள், சுற்றுப் பயணம் மற்றும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும்.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# த.வெ.க. தலைவர் விஜய் வீட்டின் மாடியில் பதுங்கியிருந்த இளைஞர்



தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் வீட்டில் இளைஞர் ஒருவர் நுழைந்தமை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதையடுத்து பாதுகாப்பு பணியில் இருந்த காவலாளிகள் அந்த இளைஞரை பிடித்து நீலாங்கரை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சென்னை - நீலாங்கரை கேசினோ டிரைவ் பகுதியில் நடிகரும், த.வெ.க. தலைவருமான விஜய்யின் வீடு அமைந்துள்ளது. அவரது வீட்டுக்கு எப்போதும் பாதுகாப்பு பணியில் பொலிஸார், தனியார் பாதுகாவலர்கள் மற்றும் ‘ஒய்’ செக்யூரிட்டி பிரிவினரும் ஈடுபவது வழக்கம். இந்த நிலையில் பலத்த பாதுகாப்பையும் மீறி இளைஞர் ஒருவர் அவரது வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்துள்ளார்.

விஜய்யின் வீட்டு வளாகத்தில் நுழைந்த அந்த இளைஞர், மொட்டை மாடிக்கு சென்றுள்ளார். அங்கு அவர் அமர்ந்திருந்ததை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டவர்கள் கவனித்துள்ளனர். பின்னர் அவரை பிடித்து நீலாங்கரை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பிடிபட்ட அந்த இளைஞரிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் அவர் மதுராந்தகத்தை சேர்ந்த அருண் (வயது 24) என்பதும், நான்கு ஆண்டுகளாக மனநலம் பாதிக்கப்பட்டு இருக்கின்றார் எனவும் வேளச்சேரியில் சித்தி வீட்டில் வசி வருகின்றார் எனவும் தெரியவந்தது.

இதையடுத்து அவரை கீழ்பாக்கம் அரசு மனநல காப்பகத்தில் நீலாங்கரை பொலிஸார் சேர்த்தனர். இந்த விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பலத்த பாதுகாப்பை மீறி அந்த இளைஞர் விஜய் வீட்டுக்குள் நுழைந்தமை குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# உயர் நீதிமன்ற வளாகத்துக்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல்



சென்னை உயர் நீதிமன்ற வளாகத்துக்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இமெயில் மூலம் இந்த வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதையடுத்து மோப்ப நாய் மற்றும் வெடிகுண்டு அகற்றும் நிபுணர்களை கொண்டு சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


நீதிபதிகள் அறைகள் மற்றும் நீதிமன்ற அறைகளில் சோதனைகள் நடத்தப்பட்டு வருகிறது. பாதுகாப்புப் பணியாளர்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கெனவே கடந்த மாதம் சென்னை உயர் நீதிமன்றத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. அதேபோல் கடந்த வாரம் சென்னை மாவட்ட நீதிமன்றத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்தது. தற்போது மீண்டும் உயர் நீதிமன்றத்துக்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல் மும்பை உயர் நீதிமன்றத்துக்கும் இமெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. அங்கும், சோதனை நடைபெற்று வருகிறது.

கடந்த 12 ஆம் திகதி டில்லி உயர் நீதிமன்றத்துக்கும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா முழுவதுமே பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்படுவதாக அவ்வப்போது நடைபெறும் சூழலில் தற்போது நீதிமன்றங்களுக்கு மிரட்டல் விடுக்கப்படுகின்றமை தொடர்கின்றது.






# சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுக்க இராணுவத்தினரை பயன்படுத்துங்கள்

## இங்கிலாந்து பிரதமருக்கு ட்ரம்ப் பரிந்துரை

சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுக்க இங்கிலாந்தின் பிரதமர் கீர் ஸ்டார்மர் இராணுவத்தைப் பயன்படுத்தலாம் என்று டொனால்ட் ட்ரம்ப் பரிந்துரைத்துள்ளார்.

மெரிக்க ஜனாதிபதியின் இரண்டாவது அரசு முறை இங்கிலாந்து பயணத்தின் முடிவைக் குறிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போதே, ட்ரம்ப் இந்த பரிந்துரையை முன்வைத்துள்ளார்.

இங்கிலாந்து பிரதமருடனான சந்திப்பின் போது இடம்பெயர்வு பிரச்சினைகள் குறித்து விவாதித்ததாக ட்ரம்ப், இதன்போது தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் எல்லைகளைப் பாதுகாப்பதற்கான தனது கொள்கைகளைப் பற்றி அமெரிக்க ஜனாதிபதி தமது அனுபவங்களை பகிர்ந்துக் கொண்டார்.

அத்துடன், சிறிய படகுகளில் ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும் புலம்பெயர்ந்தோருடன் இங்கிலாந்து இதே போன்ற சவாலை எதிர்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க நாடாளுமன்றில் ட்ரம்பின் தங்க நிறச் சிலை

அமெரிக்காவில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு தங்க நிறத்தில் சிலையொன்று நிறுவப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் உள்ள நாடாளுமன்றத்திற்கு வெளியே, நேஷனல் மால் பகுதியில் இந்த சிலை அமைக்கப்பட்டுள்ளது.

டொனால்ட் ட்ரம்பின் கையில், பிட்காயின் என்ற கிரிப்டோ கரன்சி எனப்படும் மெய்நிகர் நாணயம் வைத்திருப்பது போன்று இந்த சிலை வடிமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 12 அடி உயர தங்க நிறத்தினால் இந்த சிலை நிறுவப்பட்டுள்ளது.

இச்சிலை மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளதுடன், பல்வேறு விவாதங்களையும் கிளப்பியுள்ளது.

அந்நாட்டின் மத்திய வங்கியான பெடரல் வங்கி, கடந்த 2024 டிசம்பருக்கு பின் தற்போது அதன் வட்டி விகிதத்தை 25 சதவீத அடிப்படை புள்ளிகள் குறைப்பதாக அறிவித்தது.

இந்த அறிவிப்பு வந்த அதே நேரத்தில் இச்சிலை திறக்கப்பட்டுள்ளதுடன், இச்சிலைக்கு கிரிப்டோ கரன்சி முதலீட்டாளர்கள் நிதியளித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கிரிப்டோ கரன்சிக்கு வெளிப்படையாக டொனால்ட் ட்ரம்ப் ஆதரவு வழங்கி வருவதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும், டிஜிட்டல் நாணயத்தின் எதிர்காலம், பணவியல் கொள்கை மற்றும் நிதி சந்தைகளில் அரசின் பங்களிப்பு குறித்த விவாதத்தை தூண்டும் நோக்கத்துடன் இச்சிலை நிறுவப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# ரஷ்யாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது

ரஷ்யாவில் இன்று அதிகாலை மீண்டும் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

7.08 ஆக மெக்னிடியூட் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

கம்சட்கா பகுதியில் கடலுக்கு அடியில் 128 சுமார் கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டு இந்த நில அதிர்வு ஏற்பட்டதாக யு.எஸ்.ஜி.எஸ். எனப்படும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நில அதிர்வால் அந்தப் பகுதியில் கட்டடங்கள் குலுங்கின. அத்துடன் ஆழிப்பேரலை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.





ரஸ்யாவின் கம்சட்கா பகுதியில் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக நில அதிர்வுகள் ஏற்பட்டு வருகின்றன.

இதன்படி கடந்த 5 ஆம் திகதியன்று ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில அதிர்வை அடுத்தும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

கனடா முரசு

வெள்ளிக்கிழமை | 19/09/2025

**கனடா அமைச்சரவையிலிருந்து திடீரென விலகினார் கிறிஸ்டியா**



02▶



# அல்பர்டா மாகாண அரசாங்கத்திற்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் மோதல்

**கனடாவின் அல்பர்டா மாகாண அரசு மற்றும் அதன் 51,000 ஆசிரியர்களுக்கு இடையிலான தகராறு தீவிரமடைந்துள்ளது.**

**இரு தரப்பும் ஒருவரை ஒருவர் பொய் கூறுவதாக குற்றம் சாட்டி வருகின்றன.**

**ஆசிரியர் சங்கம் நடத்திய பல வாரங்களாக நீடிக்கும் பிரச்சாரத்துக்கு எதிராக அரசு தனது தரப்பை விளக்க விளம்பர இயக்கம் தொடங்க உள்ளதாக நிதியமைச்சர் நேட் ஹோர்னர் அலுவலகம் புதன்கிழமை உறுதிப்படுத்தியது.**

அரசு இன்னும் எந்த ஊடகங்களில் விளம்பரங்கள் வரும், செலவுகள் எவ்வளவு, எந்த நாளில் தொடங்கப்படும் என தீர்மானித்து வருகிறது.

விரைவில் விவரங்கள் அறிவிக்கப்பட உள்ளது. ஆசிரியர் சங்கம் ஒக்டோபர் 6 ஆம் திகதி வேலைநிறுத்த எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒப்பந்தம் இல்லை என்றால் 2,500 பள்ளிகளில் 7 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் வகுப்புகள் பாதிக்கப்படும். ஆசிரியர் சம்பள உயர்வு, வகுப்பறை நெரிசல் குறைப்பு என்பன குறித்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசு மூன்று ஆண்டுகளில் 3,000 ஆசிரியர்களை நியமிப்பது, பில்லியன் டாலர் மதிப்பிலான புதிய பள்ளிகள் அமைப்பது, மேலும் நான்கு ஆண்டுகளுக்கு 12 வீத சம்பள உயர்வு வழங்குவது என முன்மொழிந்துள்ளது.

எனினும் இந்த சலுகை போதுமானதல்ல, நெரிசலை சரி செய்யவில்லை என ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

# கனடாவிலிருந்து திரும்பப் பெறப்படும் டொயோட்டா நிறுவனத்தின் வாகனங்கள்




கனடாவில் டொயோட்டா நிறுவனம் தனது பல வாகன மாதிரிகளை மென்பொருள் கோளாறு காரணமாக திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது.

இந்த கோளாறு வாகனங்களின் டிஸ்ப்ளே பேனல்களை பாதிக்கக்கூடும் என்பதால், விபத்து அபாயம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது என்று நிறுவனம் எச்சரித்துள்ளது.

கனடாவில் மட்டும் 70,480 வாகனங்கள் இந்த திரும்பப் பெறலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கனடாவின் மோட்டார் 03▶



# கனடா அமைச்சரவையிலிருந்து திடீரென விலகினார் கிறிஸ்டியா

## காரணம் வெளியானது

சமீபத்தில் கனடா அமைச்சரவையில் முக்கிய பதவியில் இருந்த கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் தனது பதவியில் இருந்து விலகினார்.

பிரதமர் மார்க் கார்னி தலைமையிலான அமைச்சரவையில் போக்குவரத்து மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக பணியாற்றி வந்த அவர், இனி தேர்தல் அரசியலில் ஈடுபடமாட்டேன் என்றும் அறிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டில் கனடாவின் வரலாற்றில் முதன்முறையாக நிதி அமைச்சராக பொறுப்பேற்ற முதல் பெண்ணாக கிறிஸ்டியா வரலாறு படைத்தார்.

கொரோனா காலகட்டத்தில் நாட்டின் பொருளாதாரத்தை திறம்பட கையாள்வததற்காக அவர் பாராட்டப்பட்டார்.

அத்துடன், துணைப் பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சராகவும் பணியாற்றிய அனுபவம் அவருக்குள்ளதாகவும் கூறப்படுகிறது.

உக்ரைனிய வேர்களைக் கொண்ட கிறிஸ்டியா, 2014 ஆம் ஆண்டு ரஷ்யா விதித்த நுழைவு தடைக்கு உள்ளான மேற்கத்திய தலைவர்களில் ஒருவராக இருந்தார்.

மேலும், 2024 டிசம்பரில் ஜஸ்டின் ட்ரூடோவின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து தனது அமைச்சர் பதவியை விலகியதும், ட்ரூடோவின் அரசியல் வாழ்க்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட காரணமானதும் குறிப் பிடத்தக்கது. பின்னர் பிரதமர் பதவிக்கான போட் டியில் அவர் பங்கேற்றபோதும், மார்க் கார்னியிடம் தோல்வியடைந்தார்.

அவரது சமீபத்திய பதவி விலகலை ஏற்றுக்கொண்ட பிரதமர் கார்னி, கிறிஸ்டியாவை உக்ரைனுக்கான சிறப்பு தூதராகப் பொறுப்பேற்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

# கனடாவிற்கு கொண்டு செல்லப்பட்ட கொக்கெய்ன் போதைப் பொருள் மீட்பு

கனடாவுக்குள் கொண்டு செல்லப்பட்டு வந்த 475.95 கிலோ கிராம் கோகெய்னை அமெரிக்க சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்புத் துறை தடுத்துள்ளது.

இந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை அம்பாசெடர் Ambassador பாலம் அருகே இடம்பெற்றுள்ளது.

சந்தேகத்திற்குரிய ஒரு டிரெய்லரை சோதனை செய்தபோது, பல பெட்டிகளிலும் இரண்டு டஃபிள் பைகளிலும் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெண்மையான தூள் போன்ற பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

பரிசோதனை செய்ததில் அது கோகெய்ன் என உறுதி செய்யப்பட்டது.

கொகெய்ன், லொறி மற்றும் டிரெய்லர் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்த சம்பவத்துடன் இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.




இந்த நிதியாண்டில் மட்டும் டெட்ராய்ட் பீல்ட் அலுவலகம் 4,300 பவுண்டுக்கு மேற்பட்ட கோகெய்னும், 1,000 பவுண்டுக்கு நெருக்கமான மெத் போதைப்பொருளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.



# நூதனமான முறையில் தங்கச் சங்கிலி திருட்டு

கனடாவில் பெண் ஒருவர் நூதன முறையில் வயோதிபப் பெண்ணிடமிருந்து தங்கச் சங்கிலியை திருடியுள்ளார்.

ஹாமில்டனின் பிளாம்பரோ பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. பகல்பொழுதில் நடந்த 'நூதன கொள்ளை' சம்பவம், கதவுக் கமராவில் பதிவாகியுள்ளதுடன் அந்தக் காட்சிக் காணொலியை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

குற்றவாளியை அடையாளம் காண பொதுமக்களின் உதவியை பொலிஸார் கோரியுள்ளனர். வீட்டின் கதவை திறந்த முதியவரை ஒரு பெண் சந்தித்து, அவரை அணைத்தும் முத்தமிட்டு வரவேற்று, குற்றவாளி முதியவரின் உண்மையான தங்க சங்கிலியை போலி சங்கிலியுடன் மாற்றி விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

சங்கிலியொன்றை அன்புடன் முதிய பெண்ணுக்கு அணிவிப்பது போன்று அவரது கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை களவாடிச் சென்றுள்ளார்.

சுமார் 5 அடி 7 அங்குல உயரம், 40 வயது மதிக்கத் தக்க பணெ ஒருவரே இவ்வாறு கொள்ளையில் ஈடுபட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அன்பான வரவேற்று பரிசளிப்பு போன்ற பல்வேறு வழிகளில் இவ்வாறு முதியவர்களிடமிருந்து பொருள்கள் மற்றும் பணம் கொள்ளையிடப்படுவதாகவும் இது குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கனடாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகன பாதுகாப்பு தரவுத்தளத்தின் படி, இந்த மென்பொருள் பிரச்சினை காரணமாக வாகனம் ஸ்டார்ட் செய்யும்போது ஸ்பீடோமீட்டர், எரிபொருள் அளவு, எச்சரிக்கை விளக்குகள், மற்றும் பழுது குறியீடுகள் போன்ற முக்கிய தகவல்கள் டிஸ்ப்ளேவில் காட்டப்படா மல் போகலாம்.

இந்த திரும்பப் பெறல் 12.3-அங்குல டிஸ்ப்ளே கொண்ட வாகனங்களுக்கு மட்டுமே பொருந்தும். பாதிக்கப்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு நிறுவனம் அஞ்சல் மூலம் அறிவிப்பு அனுப்பும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் அருகிலுள்ள டீலர்ஷிப்புக்கு சென்று மென்பொருளை அப்டேட் செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சில வாகனங்களில் டிஸ்ப்ளே காம்பினேஷன் மீட்டர் முழுமையாக மாற்றப்பட வேண்டியிருக்கலாம் என அறி விக்கப்பட்டுள்ளது.

லெக்சஸ் எல்எஸ், 2024, 2025 லெக்சஸ் ஆர்எக்ஸ் 500எச், 2025 லெக்சஸ் டிஎக்ஸ், 2024 டொயோட்டா கேம்ரி, 2024 டொயோட்டா கிரவுன், 2023, 2024, 2025 டொயோட்டா கிரவுன் சிக்னியா, 2025 டொயோட்டா ஜிஆர் கொரோல்லா, 2024 டொயோட்டா கிராண்ட் ஹைலாண்டர், 2024, 2025 டொயோட்டா ஹைலாண்டர், 2023, 2024 டொயோட்டா ராவ்4, 2023, 2024, 2025 டொயோட்டா ராவ்4 ப்ரைம், 2023, 2024 டொயோட்டா டகோமா, 2024 டொயோட்டா வென்சா, 2023, 2024 ஆகிய வகை டொயேட்டா வாகனங் களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.